சிப்காட் - சிறுசேரி தகவல் தொழில்நுட்ப பூங்காவில்

ரூ.574 கோடி முதலீட்டில் ஈக்வினிக்ஸ் நிறுவனத்தின் தகவல் தரவு மையம்

முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்

சென்னை, செப். 20: சிப்காட் - சிறுசேரி தகவல் தொழில்நுட்ப பூங்காவில் ரூ.574 கோடி முதலீட்டில் ஈக்வினிக்ஸ் நிறுவனத்தின் தகவல் தரவு மையத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

தமிழ்நாட்டில் இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு உயர்த்துவதற்கும் தேவையான முதலீடுகளை ஈர்ப்பதற்கு தமிழ்நாடு அரசு பல்வேறு சிறப்பு முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது. மேலும், உயர் தொழில்நுட்ப திட்டங்களை ஈர்த்து அதன்மூலம் உயர் ஊதிய வேலைவாய்ப்புகளை பெருமளவில் உருவாக்கிடவும், தமிழ்நாடு அரசு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. தகவல் தரவு மையத்தின் முக்கிய நகரமாக சென்னை பெரும் வளர்ச்சி பெற்று வரும் நிலையில், பல்வேறு நிறுவனங்களின் புதிய தரவு மையங்கள் அமைக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவை தலைமையகமாக கொண்ட ஈக்வினிக்ஸ் நிறுவனம், உலகளாவிய வணிகங்களுக்கான சர்வதேச இணைப்பு தீர்வுகள் அளித்திடும் முன்னணி டிஜிட்டல் உள்கட்டமைப்பு நிறுவனங்களில் ஒன்றாகும். உலக அளவில், பல்வேறு நாடுகளில், தரவு மையங்களை இந்நிறுவனம் நிறுவி செயல்படுத்தி வருகிறது. செயற்கை நுண்ணறிவு மற்றும் புதிய தலைமுறை தொழில்நுட்பங்களுக்கு உகந்த உள்கட்டமைப்பை வழங்கும் நோக்கில் ஈக்வினிக்ஸ் நிறுவனம், சிப்காட் சிறுசேரியில் ஒரு நவீன தகவல் தரவு மையத்தை உருவாக்கியுள்ளது.

கடந்த 2022ம் ஆண்டு ஜூலை மாதம் நடந்த முதலீட்டாளர்கள் மாநாட்டின் போது, முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில், இத்தரவு திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. அன்றைய தினமே, இத்திட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது குறிப்பிடத்தக்கது.

அதன் தொடர்ச்சியாக, செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள சிப்காட் சிறுசேரி தொழில்நுட்ப பூங்காவில் ஈக்வினிக்ஸ் நிறுவனம் ரூ.574 கோடி முதலீட்டில் அமைத்துள்ள தகவல் தரவு மையத்தை சென்னை தலைமைச் செயலகத்தில் நேற்று தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடந்த நிகழ்ச்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

நிகழ்ச்சியில் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தக துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தலைமை செயலாளர் முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குப்பு மற்றும் வர்த்தக துறை செயலாளர் அருண் ராய், வழிகாட்டி நிறுவனத்தின் செயல் இயக்குநர் மருத்துவர் அலர்மேல்மங்கை, ஈக்வினிக்ஸ் இந்தியா நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மனோஜ் பால், துணைத்தலைவர் பால் வாக்கர் மற்றும் நிறுவனத்தின் உயர் அலுவலர்கள், அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வேலுநாச்சியார் சிலையை திறந்து வைத்த

முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு கருணாஸ் நன்றி

சென்னை, செப்.20: வீரமங்கை வேலுநாச்சியாரின் சிலையை திறந்து வைத்த முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு கருணாஸ் நன்றி தெரிவித்துள்ளார்.

முக்குலத்தோர் புலிப்படை கட்சி தலைவர் சேது.கருணாஸ் நேற்று வெளியிட்ட அறிக்கை:

வீரம் என்ற வார்த்தைக்கு தமிழர் வரலாற்றில் வீரமங்கை வேலுநாச்சியார் பெயர் தான் எதிரொலிக்கும். சிறுவயதிலிருந்து வேலுநாச்சியாருக்கு தெரிந்த ஒரே மூன்றெழுத்து வார்த்தை வீரம். தெரியாத மூன்றெழுத்து வார்த்தை பயம்.

மருது சகோதரர்களின் துணையோடு நவாப் படைகளையும், ஆங்கிலேயே படைகளையும் வென்று சிவங்கை சீமையை தனியொடு பெண்ணாக வென்றெடுத்தார். வெள்ளையர்களுக்கு கப்பம் கட்ட மறுத்து அவர்களின் சூழ்ச்சியால் நாட்டையும், கனவனையும் இழந்தும் தன்னம்பிக்கை தளராமல் போராடி இழந்த மண்ணை மீட்டு இந்திய அளவில் விடுதலை போராட்டத்திற்கு வித்திட்ட முதல் பெண் போராளி வீரமங்கை வேலுநாச்சியார்தான் என்பதில் எப்போதும் தமிழ் மண் பெருமை கொள்கிறது.

இச்சிறப்புகள் வாய்ந்த வீரமங்கையின் சிலையை சென்னை காந்தி மண்டப வளாகத்தில் திறந்து வைத்து வீரமங்கை வேலுநாச்சியார்க்கும், தமிழ்மண் வீரத்திற்கும் பெருமை சேர்த்திற்கும் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு முக்குலத்தோர் புலிப்படை சார்பாக நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

காலி பணியிடங்களுக்கு பணிநியமன ஆணை

▶ சென்னை தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய தலைமை அலுவலகத்தில், வீட்டு வசதி வாரியத்தில் காலியாக உள்ள பணியிடங்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட 3 இளநிலை உதவியாளர்கள் மற்றும் ஒரு அலுவலக உதவியாளர் மற்றும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் வாயிலாக நேரடியாக தேர்வு செய்யப்பட்ட 2 உதவி பொறியாளர்கள், 5 தொழில்நுட்ப உதவியாளர்களுக்கு பணி நியமன ஆணைகளை வாரிய தலைவர் பூச்சி முருகன் வழங்கினார். அருகில், வாரிய மேலாண்மை இயக்குனர் கணேசன், வாரிய உயர் அலுவலர்கள்.

அல்கெம் லேபரட்டரீஸ் லிமிடெட்

CIN: L00305MH1973PLC174201

பதிவு செய்யப்பட்ட அலுவலகம்: 'அல்கெம் ஹவுஸ்', சேனாபதி பாபட் மார்க், லோயர் பரேல், மும்பை 400 013.

தொலைபேசி: +91 22 3982 9999 ஃபேக்ஸ்: +91 22 2495 2955

இணையதளம்: www.alkemlabs.com, மின்னஞ்சல்: investors@alkem.com

பொது அறிவிப்பு

நிதி அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட செப்டம்பர் 17, 2025 தேதியிட்ட அறிவிப்பு எண். 9/2025 இன் படி, பல மருந்துகள், அழகுசாதனப் பொருட்கள், ஊட்டச்சத்து பொருட்கள் மற்றும் மருத்துவ சாதனங்களுக்கான சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி) விகிதம் செப்டம்பர் 22, 2025 முதல் 12% / 18% இலிருந்து 5% ஆக திருத்தப்பட்டுள்ளது என்பதை அனைத்து சரக்கு விற்பனையாளர்கள், மொத்த விற்பனையாளர்கள், சில்லறை விற்பனையாளர்கள், நுகர்வோர் மற்றும் பொதுமக்களுக்கு அறிவிக்கும் வகையில் இது செய்யப்படுகிறது.

இந்த மாற்றத்தைக் கருத்தில் கொண்டு, அல்கெம் லேபரட்டரீஸ் லிமிடெட் மற்றும் அட்ராய்ட் பயோமெட் லிமிடெட் (அல்கெம் லேபரட்டரீஸ் லிமிடெட்டின் முழு உரிமையான துணை நிறுவனம்) ஆகியவற்றின் தயாரிப்புகளின் அதிகபட்ச சில்லறை விலைகள் (MRPs) குறைக்கப்பட்ட ஜிஎஸ்டி விகிதங்களின் பயனைப் பிரதிபலிக்கும் வகையில் பொருத்தமான முறையில் திருத்தப்படுகின்றன. இந்த திருத்தம் எங்கள் தயாரிப்புகளை பரந்த அளவில் வைத்திருக்கும் பெரிய சரக்கு வைத்திருப்பு பிரிவுகளில் மேற்கொள்ளப்படுகிறது.

அல்கெம் லேபரட்டரீஸ் லிமிடெட் & அட்ராய்ட் பயோமெட் லிமிடெட் (அல்கெம் லேபரட்டரீஸ் லிமிடெட்டின் முழு உரிமையான துணை நிறுவனம்) ஆகியவை பொறுப்புமிக்க சுகாதார நிறுவனங்களாக, இந்த ஜிஎஸ்டி சீர்திருத்தத்தின் பலனை நோயாளிகளுக்கு வழங்குவதில் உறுதியாக உள்ளன. இதன் மூலம் எங்கள் தயாரிப்புகளின் மேம்படுத்தப்பட்ட விலை குறைப்பையும் மற்றும் கிடைத்தலையும் உறுதி செய்கின்றன.

பயனடைந்த சரக்கு வைத்திருப்பு பிரிவுகளின் விரிவான பட்டியல் மற்றும் அவற்றின் திருத்தப்பட்ட அதிகபட்ச சில்லறை விலைகள் கீழே உள்ள இணைப்புகளில் கிடைக்கின்றன:

Alkem Laboratories Limited நிறுவனத்துக்கு –
ttps://admin.alkemlabs.com/uploads/Revised_Price_list_effective_September_22_2025_cda9c781d4.pdf

Adroit Biomed Limited நிறுவனத்துக்கு –
https://adroitbiomed.com/Revised_Price_List_effective_September222025.pdf

QR குறியீடு: Alkem Laboratories Limited–க்கு

QR குறியீடு: Adroit Biomed Limited–க்கு

இடம்: மும்பை
தேதி: 20 செப்டம்பர் 2025

அல்கெம் லேபரட்டரீஸ் லிமிடெட் நிறுவனத்திற்காக
நிதின் அகர்வால்
தலைவர் – நிதி & தலைமை நிதி அதிகாரி

தெற்கு இரயில்வே

மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண். ME-29-II-1067-2025

1) பணி பற்றிய விவரம் பின்வருவனவற்றுக்காக மின்சார (எலக்ட்ரிக்கல்) ஏற்பாடுகள் அதாவது – 1) பேசின்பிரிட்ஜ் கோச்சிங் யார்டில் அத்தியாவசிய கட்டமைப்புக்கு புதுப்பொலிவூட்டுதல் (கழிவுநீர் வடிகாலுக்கு மேம்பாடு உட்பட) 2) பேசின்பிரிட்ஜ் கோச்சிங் யார்டு தண்ணீர் தேங்கி நிற்பதை தடுக்கவும் கழிவுநீர் வடிகால் வசதிகளை மேம்படுத்தவும் ஏதுவாக ட்ராக்குகளையும் பாயின்ட் மற்றும் கிராசிங்குகளை தூக்கும் உத்தேச பணி 3) ADEN /CGL /MAS வரம்பில் உள்ள சிங்கப்பெருமாள் கோயில் (SKL) நிலையத்தில் ஆட்டோமொபைல் சைடிங் (குட்ஸ் ஷெட் உருவாக்குதல்

2) மின்னணு ஒப்பந்தப்புள்ளி எண் : MAS/EGS/ET/06/2025-2026

தேதி : 17.09.2025

3) ஒப்பந்தப்புள்ளி எண் : ME-29-II-1067-2025

4) பணியின் மதிப்பு : ரூ.46,58,644/-

ஒப்பந்தப்புள்ளி பற்றிய மேலும் விவரங்களை www.ireps.gov.in இணையத்தளத்தில் காணலாம்.

முதுநிலை கோட்ட மின்சார பொறியாளர் / பொது / MAS

முதுநிலை கோட்ட மின்சார பொறியாளர் / பொது / சென்னை

விளம்பர எண்.02/2025

இந்திய அரசு
ஸ்டீல் அமைச்சகம்

NMDC லிமிடெட்டில் இயக்குநர் (நிதி) பதவிக்கான விண்ணப்பம் வரவேற்கப்படுகிறது.

விண்ணப்பம் கிடைக்கப் பெறுவதற்கான கடைசித் தேதி 27.10.2025, 1700 மணி வரை.

விவரங்களுக்கு https://steel.gov.in/advertisements இணையதளத்தின் உள்நுழையவும்.

cbc 40101/11/0010/2526

காசா போர் நிறுத்த தீர்மானம் ஐநாவில் மீண்டும் முறியடிப்பு

6வது முறையாக வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தி தடுத்து நிறுத்திய அமெரிக்கா

நியூயார்க், செப். 20: ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் காசா போர் நிறுத்தத் தீர்மானத்தை அமெரிக்கா தனது வீட்டோ அதிகாரத்தால் தடுத்து நிறுத்தியது. இதற்கு உலக நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

இஸ்ரேல் - ஹமாஸ் இடையேயான போர் கடந்த 2023 அக்டோபர் முதல் தொடர்ந்து வரும் நிலையில், காசாவில் லட்சக்கணக்கான மக்கள் உணவு, மருந்து உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் இன்றி தவித்து வருகின்றனர். அங்கு பஞ்சம் நிலவுவதாக ஐ.நா. அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

மேலும், இஸ்ரேல் இனப்படுகொலையில் ஈடுபடுவதாக ஐ.நா.வின் சர்வதேச விசாரணைக் குழு சில நாட்களுக்கு முன்பு குற்றம்சாட்டியிருந்தது. இந்தச் சூழலில், காசாவில் உடனடியாக நிரந்தரப் போர் நிறுத்தத்தை அமல்படுத்தக் கோரி ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. ஆனால், அமெரிக்கா தனது 'வீட்டோ' எனப்படும் சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி இந்தத் தீர்மானத்தை ஆறாவது முறையாகத் தடுத்து நிறுத்தியுள்ளது.

பாதுகாப்பு கவுன்சிலின் தற்காலிக உறுப்பு நாடுகள் இணைந்து கொண்டு வந்த இந்தத் தீர்மானத்தில், நிபந்தனையற்ற போர் நிறுத்தம், ஹமாஸ் பிடியில் உள்ள அனைத்துப் பிணைக்கைதிகளையும் உடனடியாக விடுதலை செய்தல், காசாவிற்குள் நுழையும் மனிதாபிமான உதவிகளுக்கான தடைகளை நீக்குதல் ஆகிய கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன. கவுன்சிலில் உள்ள 15 உறுப்பு நாடுகளில், அமெரிக்காவைத் தவிர மற்ற 14 நாடுகளும் தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்தன.

ஆனால், இந்தத் தீர்மானம் ஹமாஸ் அமைப்பைக் கண்டிக்கத்தவறிவிட்டதாகவும், இஸ்ரேலின் தற்காப்பு உரிமையை அங்கீகரிக்கவில்லை என்றும் கூறி அமெரிக்கா இதனை நிராகரித்தது.

அமெரிக்காவின் இந்த முடிவுக்கு பாலஸ்தீனம், அல்ஜீரியா உள்ளிட்ட நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன. அமெரிக்காவின் இந்த முடிவை இஸ்ரேல் வரவேற்றுள்ளது.

தெற்கு இரயில்வே

சேலம் கோட்டம்

முதுநிலை கோட்ட மின்சார பொறியாளர் அவர்கள் அலுவலகம், எலக்ட்ரிக் லோகோ ஷெட், ஈரோடு

மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

பின்வரும் பணிக்காக ஆன்லைன் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தப்புள்ளி எண்	SA_A_RS_ED_OT_25_26_8 தேதி 17.09.2025
பணி பற்றிய விவரம்	எலக்ட்ரிக் லோகோ ஷெட், சேலம் கோட்டம், தெற்கு இரயில்வே, ஈரோடு – ல் லோகோ கழுவுதல் மற்றும் சைடு பாடி பில்ட்டர்ஸ், காரிடாரின் உட்புறம் ஆகியவற்றையும் அங்கு உள்ள எலக்ட்ரிக் லோகோமோட்டிவ்களின் CABகள் மற்றும் லுக் அவுட் கண்ணாடிகளையும் சுத்தம் செய்தல் ஆகியவற்றுக்கான பணிகள் ஒப்பந்தம்

ஒப்பந்தப்புள்ளி பற்றிய அனைத்து தகவல்களையும் https://www.ireps.gov.in இணையதளத்தில் காணலாம்.

கோட்ட மின்சார பொறியாளர்/ரோலிங் ஸ்டாக் /ஈரோடு

முதுநிலை கோட்ட மின்சார பொறியாளர் /ரோலிங் ஸ்டாக்/எலக்ட்ரிக் லோகோ ஷெட்/ ஈரோடு அவர்களுக்காக

தமிழ்நாடு மெர்க்கன்டைல் பேங்க் லிமிடெட், ஆவடி கிளை

மனை எண்.7, G.D. நாயுடு காம்ப்ளக்ஸ், 60 அடி சாலை,, TNHB, ஆவடி- 600 054. PH: 044-26551035

நகை ஏல அறிவிப்பு

எங்களது வங்கி கிளையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள நபர் தங்களது நகைகளை அடமானம் வைத்து நகைக்கடன் பெற்று உள்ளார். நகைக்கடன் தவணை காலம் முடிந்தும் மற்றும் கடன் நிலுவைத்தொகை கடனுக்கு ஈடாக கொடுக்கப்பட்டுள்ள தங்கத்தின் மதிப்பை விட அதிகரித்துள்ளதால் நகைக்கடன் தொகையை வட்டி மற்றும் செலவுத்தொகையை செலுத்துமாறு பதிவு தபால் மூலம் தகவல் தெரிவித்தும் பதிவு தபால் பெற்றுக்கொண்டும் / தபால் பட்டுவாடா ஆகாமலும் நகைகள் இன்றுவரை மீட்கப்படாமல் மற்றும் மேற்கூறியவாறு நகைக்கடனை சரிசெய்யாமல் உள்ளது. எனவே சம்பந்தப்பட்டவர்கள் இந்த விளம்பரம் கண்டவுடன் தங்களது நகைக்கடனை வரும் **26.09.2025** தேதி வெள்ளிக்கிழமை மாலை **3.00** மணிக்குள் நகைகள் மீட்கப்படாவிடில், அந்த நகைகள் **26.09.2025** தேதி வெள்ளிக்கிழமை மாலை **3.30** மணியளவில் எங்களது வங்கி கிளையில் வைத்து பகிரங்க ஏலம் அல்லது தனிப்பட்ட முறையிலோ விற்கப்படும் என்பதை தெரியப்படுத்திக் கொள்கிறோம். ஏலத்தை நிறுத்தி வைக்கவோ ஏலத்தேதியை மாற்றி வைக்கவோ ஒத்திவைக்கவோ வங்கிக்கு முழு அதிகாரம் உண்டு. கீழே கண்ட நபர் இறந்திருந்தால் இவ்விளம்பரம் சம்பந்தப்பட்ட வாரிசுதாரர்களுக்கும் பொருந்தும். நகைகள் விற்றுக்கிடைக்கும் தொகை அவரவர் நேர்முக மறைமுக பொறுப்பு கடன்களில் வரவு வைக்கப்படும்.

வ எ ண்.	கடன் பெற்றவர் பெயரும், முகவரியும்	கடன் தொகை ரூ.	நிலுவையில் உள்ள தொகை (ரூ) 31.08.2025	நகையின் எடை (கிராமில்)
1.	திரு.C. லோகேஸ்வரன் த/பெ. சிட்டிபாபு, மனை எண்.2014, 1வது தளம், LIG 1, TNHB ஆவடி, சென்னை - 600 054. **கடன் எண். 378700260103230 கடன் தேதி : 13.01.2025**	93,000	99,430.60	19.50

குறிப்பு: மேற்படி ஏலத்தை நடத்தவோ ரத்து செய்யவோ வங்கிக்கு முழு அதிகாரம் உண்டு. ஏலமானது அதே நாளில் குறிப்பிட்ட நேரத்தில் முடிவுறாவிட்டால் அதை அதற்கடுத்த நாட்களில் அதே விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் புதிய அறிவிப்பு ஏதுமின்றி தொடரப்படும். ஏலம் எடுக்க விரும்புவோர் அடையாள சான்று, முகவரி சான்று மற்றும் பான் அட்டை (PAN CARD) எடுத்து வர வேண்டும். ஏலம் எடுப்போர் 3% GST சேர்த்து செலுத்த வேண்டும்.

இடம் : ஆவடி
தேதி : 19.09.2025

தொடர்புக்கு 96594 10888 / 75300 89905 / 044-26551035

கிளை மேலாளர், ஆவடி கிளை

தெற்கு இரயில்வே

முதுநிலை கோட்ட வர்த்தக மேலாளர், தெற்கு இரயில்வே, சென்னை கோட்டம், சென்னை – 600 003 அவர்களால், மேதகு இந்தியக் குடியரசுத் தலைவரின் சார்பிலும் அவருக்காகவும், சென்னை கோட்டத்தின் NSG-1 வகையின இரயில் நிலையமான புரட்சித் தலைவர் டாக்டர் எம்ஜிஆர் சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் (MAS) M - UTS சகாயக் (உறுதுணை புரிபவர்) (மொபைல் முன்பதிவு இல்லாத பயணச்சீட்டுகளை அளிக்கும் சிஸ்டம்) நியமனம் செய்வதற்காக விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

1.	பணி பற்றிய விவரம் மற்றும் அதன் அமைவிடம்	சென்னை கோட்டத்தின் NSG - 1 வகை இரயில் நிலையமான புரட்சித் தலைவர் டாக்டர் எம்ஜிஆர் சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் M-UTS சகாயக் (உறுதுணை புரிபவர்) (மொபைல் முன்பதிவு இல்லாத பயணச்சீட்டுகளை அளிக்கும் சிஸ்டம்) நியமனம் செய்வதற்காக விண்ணப்பங்களை வரவேற்றல்
2.	செலுத்தப்பட வேண்டிய பிணை வைப்பு தொகை	ரூ. 10,000/–
3.	ஒப்பந்த காலம்	01 ஆண்டு
4.	நேரில் விவரங்களை பெறுவதற்கான அலுவலக முகவரி :	முதுநிலை கோட்ட வர்த்தக மேலாளர், என்ஜிஓ இணைப்பு கட்டிடம், 2வது மாடி, பூங்கா நகர், தெற்கு இரயில்வே, சென்னை – 600 003
5.	ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்கப்படுவதற்கான தேதியும் நேரமும்	08–10–2025 அன்று 14.00 மணி வரை
6.	ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் தேதியும்	08–10–2025 அன்று 14.30 மணி.
7.	இணையதள முகவரி	www.sr.indianrailways.gov.in

இந்த நியமனம், முழுக்க முழுக்க ஒப்பந்த அடிப்படையிலானது. எனவே, இரயில்வே துறை வேலையில் சேர்த்துக் கொள்ளப்படுதல், சர்வீஸ் முறைப்படுத்துதல், போனஸ், இரயில்வே பாஸ் ஆகிய வசதிகள் என எதுவும் M-UTS சகாயக் (உறுதுணை புரிபவர்)க்கு தரப்பட மாட்டாது என்பதை கவனத்தில் கொள்ளவும்.

விண்ணப்பங்கள் பெறப்படும் தேதி விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டால் அவை அதற்கடுத்த வேலை நாளில் பெறப்படும்.

கோட்ட இரயில்வே மேலாளர், வர்த்தகம்,
தெற்கு இரயில்வே, சென்னை – 600003

ரூ.105 கோடி இன்சூரன்ஸ் மோசடி விரைவாக விசாரிக்க வேண்டும்

உயர் நீதிமன்றம் உத்தரவு

சென்னை, செப். 20: போலி இன்சூரன்ஸ் மோசடி குறித்து வழக்குகள் சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ் முன்பு மீண்டும் விசாரணைக்கு வந்தது. காவல்துறை தரப்பில் ஆஜரான கூடுதல் குற்றவியல் வழக்கறிஞர் ராஜ்திலக், போலி இன்சூரன்ஸ் மோசடி குறித்து சிறப்பு புலனாய்வு குழு விசாரணை நடத்த தயாராக உள்ளது என்றார்.

இதை கேட்ட நீதிபதி, தமிழகம் முழுவதும் 105 கோடி ரூபாய் இன்சூரன்ஸ் மோசடி தொடர்பாக 467 புகார்கள் மீது இதுவரை வழக்கு பதிவு செய்யவில்லை. எனவே இந்த புகார்கள் மீது உடனே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து சிறப்பு புலனாய்வு குழுவுக்கு அனுப்ப வேண்டும். அந்த வழக்கை உடனடியாக விசாரணைக்குழு விசாரிக்க வேண்டும்என்று உத்தரவிட்டார்.

pnb Housing Finance Limited Ghar Ki Baat

பதிவு அலுவலகம்: 9வது தளம், அந்தரிக்ஷ் பவன், 22, கே.ஜி. மார்க், புதுடெல்லி–110001
தொலைபேசி: 011-23357171, 23357172, 23705414, இணையதளம்: www.pnbhousing.com

தாம்பரம் கிளை: பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட், மனை எண்.11, 2 ஆவது தளம், கதவு எண்.2A, வெங்கடேசன் தெரு, கிழக்கு தாம்பரம், சென்னை–600059.
சென்னை கிளை: RH_சென்னை–கிண்டி, சி 45, முதல் தளம், திரு.வி.க.தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை–600032.

நாளது தேதிய திருத்தப்படி கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 3(1) உடன், பத்திரமயமாக்கல் & நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம் 2002 இன் அத்தியாயம் III இன் பிரிவு 13(2) கீழ் அறிவிப்பு நாங்கள், பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (இனிமேல் 'பிஎன்பிஹெச்எஃப்' ஆக குறிப்பிடப்படும்) பத்திரமயமாக்கல் & நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (இனிமேல் "சட்டம்" ஆக குறிப்பிடப்படும்) இன் அத்தியாயம் III இன் பிரிவு 13(2) கீழ் கோரிக்கை அறிவிப்பு வழங்கியிருக்கோம். தவணைகள்/வட்டி செலுத்தப்படாத காரணத்தால் இந்திய ரிசர்வ் வங்கி/ நேஷனல் ஹவுசிங் பேங்க் வழிகாட்டுதல்களின்படி உங்கள் கணக்கு செயல்படாச் சொத்துகள் ஆக வகைப்படுத்தப்பட்டிருப்பதால் கீழே குறிப்பிட்ட கடன்தாரர்கள்/ உப–கடன்தாரர்/ ஜாமீன்தாரர்கள் ஆகிய உங்கள் அனைவருக்கும் எங்கள் அதிகாரப்பூர்வ அதிகாரி மூலம் மேற்கூறிய கோரிக்கை அறிவிப்பு வழங்கப்பட்டது. அதன் உள்ளடங்கங்கள் ஆனது அஞ்சல், வட்டி எனைய தவணைகளைச் செலுத்துவதில் நீங்கள் பொறுப்பு தவறியிருக்கிறீர்கள். நிலுவைத்தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. மேற்கொண்டு, காரணங்களால், நீங்கள் கோரிக்கை அறிவிப்பு பெறுவதைத் தவிர்ப்பதாக நாங்கள் நம்புகிறோம் எனவே இந்த கோரிக்கை அறிவிப்பு பிரகாரம் மேற்கொண்டிருக்கிறோம் இது மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(2) கீழ் தேவைப்படுவதாகும் ஆகிறது. இதன்மூலம் நீங்கள் இந்த கோரிக்கை அறிவிப்பு பிரகாரமான தேதியிலிருந்து 60 நாட்கள் காலத்திற்குள் மேற்கூறிய தொகையை நாளது தேதிய வட்டி மற்றும் கட்டணங்களுடன் பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடுக்கு செலுத்துமாறு கோரப்படுகிறீர்கள், தவறினால் பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் ஆனது கடன்தாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்களின் கடனீட்டுச் சொத்துகளை கவனத்தை செய்தல் உட்ப அனைவரும் ஏதேனும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கடனீட்டுச் சொத்துகளுக்கு எதிராக, மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(4) இன் அனைத்து அல்லது ஏதேனும் விதிமுறைகளின் கீழ் உரிய நடவடிக்கைகள் எடுக்கும். பத்திரமயமாக்கல் மறும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 இன் பிரிவு 13 இன் உட்–பிரிவு (8) விதிமுறைகள் உங்கள் கவனத்திற்கு கொண்டுவரப்படுகின்றன இதன்கீழ் நீங்கள் பொதுமக்களிடமிருந்து விலையுயர்ளிகள், ஒப்பந்தப்புள்ளி வரவேற்புகள் மூலமான, பொது ஏலம் மூலம் அல்லது தனி ஒப்பந்தம் மூலம் கடனீட்டுச் சொத்துகள் விற்பனைக்கான அறிவிப்பு பிரகாரமும் தேதி வரை மட்டும் பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடுக்கு ஏற்பட்ட அனைத்து செலவுகள், கட்டணங்கள் மற்றும் செலவினங்களுடன் சேர்த்து முழு நிலுவைத்தொகைகளை அளிக்கலாம்.செலுத்தலாம். பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடுக்கு ஏற்பட்ட செலவுகள், கட்டணங்கள் மற்றும் செலவினங்களுடன் சேர்த்து முழு நிலுவைத்தொகைகள் ஆனது பொதுமக்களிடமிருந்து விலையுயர்ளிகள், ஒப்பந்தப்புள்ளி வரவேற்புகள் மூலமான, பொது ஏலம் மூலம் அல்லது தனி ஒப்பந்தம் மூலம் கடனீட்டுச் சொத்துகள் விற்பனைக்கான அறிவிப்பு பிரகாரமாகும் முன்பு செலுத்தப்பட்டால், அதன்பிறகு நீங்கள் கடனீட்டுச் சொத்தினை(களை) மீட்பதற்கு உரிமையுடையவராகுவீர். மேற்கொண்டு, மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(13) கீழ் மேற்கூறிய கடனீட்டுச் சொத்துகளை விற்றனை, குத்தகை அல்லது ஏதேனும் பிற வழியில் பெயர்மாற்றம் செய்வதற்கு நீங்கள் தடை செய்யப்பட்டிருக்கிறீர்கள்.

கடன் கணக்கு எண்	கடன்தாரர் & உப–கடன்தாரர் பெயர்/ முகவரி	ஜாமீன்தாரர்(கள்) பெயர் & முகவரி	அடமானச் சொத்து(கள்)	கோரிக்கை அறிவிப்பு நாள்	கோரிக்கை அறிவிப்பு தேதியன்று நிலுவைத்தொகை
NHL/TBM/ 0219/652707, கிளை அலுவலகம்: தாம்பரம்	திருமதி.தனலட்சுமி A, க/பெ, ஆறுமுகம், எண்.18, 2 ஆவது தளம், 4ஆவது தெரு, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை, சென்னை, தமிழ்நாடு–600034, மேலும் **இருப்பிடம்:** எண்.165/1, பூவிருந்தவல்லி நெடுஞ்சாலை, கீழ்ப்பாக்கம், சென்னை, தமிழ்நாடு–600010, மேலும் **இருப்பிடம்:** பிளாட் எண்.34, வ.உ.சி.நகர், மேற்கு தாம்பரம், சென்னை, தமிழ்நாடு–600045, **திரு. ஸ்ரீ வெங்கடேஸ்வரா P, த/பெ, புகழேந்தி,** எண்.18, ஆவது தளம், 4ஆவது தெரு, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை, சென்னை, தமிழ்நாடு–600003, **M/S, பெனிவோலன்ட் ஹெல்த்கேர் பப்ளிக் சாரிட்டபிள் ட்ரஸ்ட்,** எண்.165/1, பூவிருந்தவல்லி நெடுஞ்சாலை, கீழ்ப்பாக்கம், சென்னை, தமிழ்நாடு–600010, **திரு.புகழேந்தி S, த/பெ, சேதுராமன்,** எண்.18, ஆவது தளம், 4ஆவது தெரு, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை, சென்னை, தமிழ்நாடு–600034, மேலும் **இருப்பிடம்:** பிளாட் எண்.34, வ.உ.சி.நகர